# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 07.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதியான பிரபா ஸ்ரீ தேவனின் "Vineyard Equality" புத்தகத்தின் தமிழ் பதிப்பு "ஈடேற்றும் சமத்துவம்" என்ற பெயரில் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜியால் வெளியிடப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- 100 சதவீத ஓட்டுப் பதிவுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்தால் தொடங்கப்பட்ட "ஸ்வீப்" (Sveep) திட்டத்திற்கான தனி வலைத்தள அமைப்பை (SVEEP Portal) தேர்தல் ஆணையம் தொடங்கி உள்ளது.
  - SVEEP – Systematic Voters' Education and Electoral Participation
  - **குறிப்பு:** இந்திய தேர்தல் ஆணையம் 25 ஜனவரி 1950ல் ஏற்படுத்தப்பட்டது.
  - முதல் தலைமைத் தேர்தல் ஆணையர் - சுகுமார் சென்
  - தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் - ஓம் பிரகாஷ் ராவத்
  - **பிற தேர்தல் ஆணையர்**
  - அசோக் லாவசா
  - சுனில் அரோரா

- இந்தியாவில் முதல்முறையாக கேமிங் தொழில்நுட்பத்திற்கான வடிவமைப்பு பல்கலைக்கழகத்தை (Design University for Gaming)

UNESCO அமைப்பானது ஆந்திர பிரதேசம் மாநிலம் விசாகப்பட்டினத்தில் தொடங்க உள்ளது.

- சம்பல் திட்டம் - இத்திட்டமானது வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு மாதம் 200 ரூபாயில் மின்சாரம் வழங்குவதற்காக மத்தியப் பிரதேச அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

- விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சட்ட விரோத நிலக்கரி ஏற்றுமதியை தடுக்க "Khan Prahari" என்ற புதிய மொபைல் செயலியை நிலக்கரித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
    - மேலும், சட்ட விரோத நிலக்கரி ஏற்றுமதியை தடுக்க உதவும். "நிலக்கரி சுரங்க கண்காணிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பையும் (CMSMS) தொடங்கியுள்ளது.
    - CMSMS – Coal Mine Surveillance Managemem System

- ஹெக்சாபோட் ரோபோ – பேரிடர் மற்றும் ஆபத்துக் காலங்களில் சிக்கித் தவிக்கும் மனிதர்களைக் கண்டுபிடித்த காப்பாற்ற பெங்களூரைச் சேர்ந்த சப்தகிரி பொறியியல் கல்லூரி மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

- வீடுகள் இல்லாத ஏழைக்குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கும் "புதுமனை புகுவிழா" என்னும் திட்டம் ஆந்திர பிரதேச மாநில அரசால் தொடங்கப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் 3 லட்சம் ஏழைகளுக்கு வீடு வழங்கப்பட்டது.

**உலக நிகழ்வுகள்**

- முதன் முறையாக உலக சகிப்புத் தன்மை மாநாடு (World Tolerance Summit) ஐக்கிய அரேபிய எமிரேட்டில் நவம்பர் 16, 17 தேதிகளில் நடைபெறுகிறது.
    - கருப்பொருள்: Prospering Pluralism: Embracing diversity through Innovation and Collaboration
    - நவம்பர் 16 – உலக சகிப்புத் தன்மை தினம்


We Shine Academy™

- ஐ.நா. அகதிகள் ஆணையத்தின் நல்லெண்ண தூதராக ஹாலிவுட் நடிகர் மற்றும் தயாரிப்பாளர் பெண் ஸ்டில்லர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
    - ஐ.நா. அகதிகள் ஆணையம் (UNHCR)
    - 14 டிசம்பர் 1950ல் அகதிகளின் பாதுகாப்பிற்காக ஐ.நா.வால் ஆரம்பிக்கப்பட்டது.
    - இதன் தலைமையகம் - ஜெனிவா, சுவிட்சர்லாந்து
    - இதன் தலைவர் - பிலிப்போ கிராண்டி

**நியமனங்கள்**

- தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) தலைவராக ஆதார்ஷ் குமார் கோயல்" என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - **தேசிய பசுமை தீர்பாயம்**
    - இத் தீர்பாயம் தேசிய பசுமை தீர்ப்பாயம் சட்டம் 2010ன் கீழ் அக்டோபர் 18, 2010ல் அமைக்கப்பட்டது.
    - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

We Shine Academy